**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.**

Calendar)
Preliminary Register)            CC.944/2015
Sessions)

Deposition of witness for            (Prosecution  P.W.22
(Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | காந்திமதி | -- | |
| Husband's Name | மூர்த்தி | Calling | |
| Village | கோட்டைப்பட்டி | Religion | |
| Taluk | ஸ்ரீவில்லிபுத்தூர் | Age | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 22nd Day of June 2026..

6 ஆம் எதிரி ஆஜர். 1, 2, 3, 4, 5, 8 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச. பிரிவு. 317 ன் கீழ் மனுத்தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. 7 ம் எதிரி இறந்துவிட்டதால் குற்றச்சாட்டு அற்றுவிட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். சாட்சி ராமலட்சுமி என்பவரைத் தெரியும். அவர் என்னிடம் கடந்த 2011 ம் வருடம் பத்து பேர் சேர்ந்து தலா ரூ.1000/- வீதம் பணம் செலுத்தினால் ரூ.25,000/- வீதம் பணம் செலுத்திய ஒவ்வொரு நபருக்கும் கடன் பெற்றுத் தருவதாகச் சொன்னார்கள். எனது தலைமையில் மூன்று குழுக்களை அமைத்து குழுவுக்கு ரூ.10,000/- வீதம் ரூ.30,000/- யை ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்டேட் வங்கியில் டிடி யாக எடுத்து இராஜபாளையத்துக்கு அழைத்துச் சென்று அந்த டிடியை மேற்படி அலுவலகத்தில் வெளியே நிற்க வைத்து விட்டு அவர் கொடுத்தார். மேற்படி குழுவிற்கு காந்திமதி, வீராச்சாமி, அமன் என்ற மூன்று பெயர்களையும் குழு சேர்த்து கொடுத்தோம். அதன்பின்பு 2012 ல் இரண்டு குழு சேர்த்து குழுவிற்கு 10 பேர் வீதம் தலா ரூ.10000/- வசூல் செய்து ரூ.20, 000/- யை சாட்சி ராமலட்சுமியிடம் கொடுத்தோம். அதன்பின்னர் நாங்கள் லோன் எடுத்துத் தருமாறு கேட்டோம். அதற்கு அ.சா.1. எங்களிடம் விருதுநகரில் புகார் கொடுத்துள்ளோம், பணம் வந்த பின் தருவேன் என்று சொன்னார்கள். அதன்பின்பு பணம் வரவில்லை. தற்போது சம்மன் பெற்றபிறகு ரூ.10000/- யை எனது மகன் வங்கிக் கணக்கில் அ.சா.1 செலுத்தி உள்ளார். நான் மீதி பணத்தை கேட்டதற்கு மேலாக பணம் வராது என்றும், ரூ.5000/- மட்டும் தருவேன் என்றும், பணம் கொடுத்த நபர்களுக்கு ரூ. 500/- வீதம் பிரித்துக் கொடுங்கள் என்றும் என்னிடம் சொன்னார். மேற்படி சம்பவம் சம்பந்தமாக யார்

மீது வழக்கு போடப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியாது. போலிசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் நடத்திய குழுவின் பெயர் காந்திமதி மகளிர் குழு. காந்திமதி குழுவுக்கு நான் தான் தலைவர், மற்ற குழுக்களுக்கு வேறு நபர்கள் தான் தலைவர் என்றால் சரிதான். எங்கள் குழுவுக்கு வரவேண்டிய பணத்தை திரும்ப பெற்றுக்கொண்டு நான் மறுக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு பொறுப்பான நபர் ராமலட்சுமி தான், அவரிடம் எல்லாத் தொகையும் கொடுக்கப்பட்டுவிட்டது என்றும், அவர்தான் எங்களுக்கு கொடுக்க வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

R V RAJA KUMAR
Digitally signed by R V RAJA KUMAR
Date: 2026.06.22 17:25:21 +0530

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**